
සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது)
All Rights Reserved]

N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

✪ 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்து வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1)





(1)





(2)




(3)

(2)





(1)




(2)




(3)

✪ 3, 4 ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய உருக்களில் இருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.


(3)



(1)




(2)




(3)


(4)



(1)



(2)



(3)

✪ 5, 6 ஆகிய வினாக்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களிலும் சேராதது எது?

(5) நாள், வாரம், கிராம், செக்கன், கிலோ கிராம், லீற்றர்.
(1) செக்கன் (2) கிராம் (3) லீற்றர்


(6) விருட்சகம், சூரியன், புதன், சிம்மம், செவ்வாய், தென்சிலுவை
(1) சூரியன் (2) சிம்மம் (3) செவ்வாய்

✪ 7, 8 ஆகிய வினாக்களில் A = 2, B = 3, C = 5, D = 6, E = 8 என இட்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


(7)
$$\begin{array}{r} D\ C\ E \\ -\ B\ B\ B \\ \hline \\ \hline \end{array}$$
(1) ABC (2) BAC (3) ACB

(8)
$$\begin{array}{r} C\ A \\ +\ B\ D \\ \hline \\ \hline \end{array}$$
(1) AA (2) DD (3) EE


(9) பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள செங்கோணங்களிலும் குறைந்த கோணங்கள் அதிகரிக்கும் ஒழுங்கில், அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.



A



B



C

(1) C, A, B (2) C, B, A (3) B, A, C


(10) பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களில் உயரம் குறைந்தவரையும், உயரம் கூடிய வரையும் முறையே தெரிவு செய்க.

பெயர்	உயரம்
• அனுலா	2m 66cm
• ரொனி	1m 74cm
• குரு	2m 69cm
• சது	1m 94cm

(1) அனுலா, சது
(2) ரொனி, குரு
(3) ரொனி, அனுலா

www.lkedu.lk

(11) பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



(1) 6 (2) 5 (3) 4

(12) பின்வரும் பாடல் அடிகளை வாசிக்க.


A. பெரியவர் இடத்தில் மரியாதை
B. பெற்றவர் இடத்தில் மரியாதை
C. காட்டி நடப்பது ஒழுக்கம் என்பதோம்.
D. கற்றவர் இடத்தில் மரியாதை

இப்பாடல் அடிகள் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) ABDC (2) BADC (3) ABCD

(13) பின்வரும் உருவில் உள்ள எண்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.


39	42	45	48
		12	15
33		3	18
30	27	24	21



(14) 1 தொடக்கம் 110 வரையுள்ள எல்லா எண்ணையும் எழுதும் போது இலக்கம் 0 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 18 (3) 21

(15)



உருவில் $\frac{3}{5}$ பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்டுள்ள கட்டங்களுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்?

(1) 5 (2) 7

(3) 9

www.tkedu.lk


(16) கல்வி கற்றவர்கள் அனைவரும் புத்திசாலிகள் அல்லர் எனின்,
(1) புத்திசாலிகள் ஒரு போதும் கல்வி கற்றவர்கள் அல்லர்.
(2) கல்வி கற்றவர்கள் இல்லாத எவரும் புத்திசாலிகள் அல்லர்.
(3) சில கல்வி கற்காதவர்கள் புத்திசாலிகள் ஆவார்.

(17) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

ஊசி : நூல் எனில், ரயர் _____

(1) வாகனம் (2) ரியூப் (3) காற்று

(18) ஒரு வரிசையில் 28 மாணவர்கள் நிற்கின்றனர். முதலில் நின்று 1, 2, 3 எனக் கூறியவாறு முறையே எண்ணுகின்றனர். பின்னர் கடைசியிலிருந்து 1, 2, 3 எனக் கூறியவாறு முறையே எண்ணுகின்றனர். முதலில் இருந்து இரண்டாவதாக உள்ள மாணவர் முதற் சுற்றில் 2 எனக் கூறியவர், கடைசியிலிருந்து எண்ணும் போது கூறும் இலக்கம் எத்தனை?
(1) 1 (2) 2 (3) 3


(19) 

ஐந்து சம சதுரங்களில் வைத்து உருவாக்கப்பட்ட உரு அருகில் தரப்பட்டுள்ளது. உருவின் பரப்பளவு 125 சதுர சென்றிமீற்றர் எனில், உருவின் சுற்றளவு எத்தனை சென்றிமீற்றர்?
(1) 60 (2) 64 (3) 70

(20) 30 நாட்களைக் கொண்ட மாதத்தில் சனி, ஞாயிறு ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 21 ஆந் திகதி என்ன கிழமை?
(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி


(21) ஒரு வாழைப்பழத்தின் விலை ரூபா 15 உம், ஒரு மாம்பழத்தின் விலை ரூபா 20 உம் ஆகும். அனுலா வாழைப்பழம் மற்றும் மாம்பழங்களை வாங்குவதற்குச் செலவிட்ட பணம் ரூபா 185 ஆகும். அனுலா வாங்கிய வாழைப்பழங்களின் எண்ணிக்கை.
(1) 5 (2) 6 (3) 7

(22) தாயக்கட்டையொன்றின் ஆறுபக்கங்களும் 1, 2, 3, 4, 5, 6 எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.



மேலே குறிப்பிட்ட தாயக்கட்டையில் இலக்கம் 4 என குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள இலக்கம் எது?
(1) 1 (2) 2 (3) 6

(23) காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கண்டியை நோக்கி ஒரு மாறாத கதியில் நிறுத்தாமல் பயணம் செய்த பேரூந்தின் பயணம் பற்றிய விபரம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.




அடைந்த நகரம்	நகரத்திலுள்ள km தூரம்	அடைந்த நேரம்
வவுனியா	140 km	ந.ப.12.00
கண்டி	340 km	?

இதற்கேற்ப பேரூந்து கண்டி நகரத்தைப் பிற்பகல் எத்தனை மணிக்கு அடையும்?

(1) பி.ப. 4.30 (2) பி.ப. 5.00 (3) பி.ப. 5.30

(24)



ஒரு விவசாயத் தோட்டத்திலுள்ள பழமரங்களை A, B, C, D என வகை குறிக்கப்பட்டுள்ளது. இதில் C யிலுள்ள பழமரங்களின் எண்ணிக்கை 18 எனில், தோட்டத்திலுள்ள மொத்தப் பழ மரங்கள் எத்தனை?

(1) 72 (2) 118 (3) 144


(25) நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணில்....

- முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் ஆறு மடங்காகும்.
- இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்ணில் யாதாக இருக்கலாம்?

(1) 6931 (2) 1396 (3) 6991

✪ ஒரு நகரிலுள்ள மனிதர்கள், ஆண்கள், பெண்கள், ரொனி ஆகியோருக்கு இடையிலான தொடர்பு உருவில் வகை குறிக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு 26, 27 வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.



(26) ரொனியை வகை குறிக்கும் எழுத்து எது?

(1) B (2) C (3) D

(27) எழுத்து D இனால் வகை குறிக்கப்படுவது யார்?

(1) ஆண்


(2) பெண்

(3) ரொனி

(28) பின்வரும் தொடர்பை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.



கீழே தரப்பட்டுள்ள எத்தொடர்பு மிகவும் சரியானது?

(1) 

(2) 


(3) 

(29) ஒரு குறித்த நகரத்தில் நூலகத்திற்கு கிழக்கே பூங்கா உள்ளது. நூலகத்திற்கு மேற்கே விளையாட்டு மைதானம் உள்ளது எனில்.....

(1) பூங்காவுக்கு கிழக்கே நூலகம் உள்ளது.

(2) விளையாட்டு மைதானத்திற்கும், நூலகத்திற்கும் இடையே பூங்கா உள்ளது.


(3) பூங்காவுக்கு மேற்கே நூலகமும், விளையாட்டு மைதானமும் உண்டு.

(30) 

இவ்வுருவில் காணப்படும் நெம்புகோல் தராசின் A, B தட்டுக்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகள் ஒன்றுக்கொன்று சமம்.

இதற்கேற்ப ◯ இன் நிறைக்குச் சமமான பொருள்கள் எவை?

(1) ◯ ◯ (2) △ △ (3) △ ◯

(31) 

அருகில் தரப்பட்டுள்ள உருவில் எத்தனை செங்கோணங்களைக் காணலாம்,

(1) 8 (2) 10 (3) 12


(32) பின்வரும் கோலத்திற்கு அமைய, இரு வெற்றிடங்களிலும் முறையே இருக்க வேண்டிய உருச்சோடியைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3) 

(33) □ × ◯ = 64 ஆகவும், □ - ◯ = 12 ஆகவும் இருப்பின், □ + ◯ இன் பெறுமதி யாது?


(1) 18 (2) 20 (3) 22

(34) 

உருவிலுள்ள திண்மவுருவை படத்திலுள்ளவாறு இரு சம பகுதிகளாக வெட்டும் போது, ஒரு பாதியிலுள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9

(35) முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகார முகம் தோன்றும் விதம் உருவில் காணப்படுகிறது. இக்கடிகாரம் காட்டும் உண்மையான நேரம் யாது?




(1) 6.20 (2) 6.40 (3) 4.30


(36) பின்வரும் கணிதச் செய்கையை அவதானித்து, பொருத்தமான குறியீட்டைத் தெரிவு செய்க.

512 □ 8 = 8 □ 8

(1) +, × (2) ÷, × (3) ×, ÷

(37) பின்வரும் உருவில் எண் ஒன்றினை, இலக்க அட்டையினால் காட்டப்படும் விதம் காட்டப்பட்டுள்ளது.






அருகில் தரப்பட்டுள்ள எண் அட்டையில் அம்புக்குறியினால் வகை குறிக்கப்படும் இலக்கத்தை தெரிவு செய்க.

(1) 4 (2) 7 (3) 9

(38) அருகில் தரப்பட்டுள்ள 30cm நீளமும் 15cm அகலமும் கொண்ட கடதாசியிலிருந்து அளவுடைய எத்தனை வட்டங்களை வெட்டி எடுக்கலாம்?



(1) 21 (2) 28 (3) 35

(39) ஒரு மூடையிலிருந்து 3kg 475g சீனியை விற்பனை செய்த பின்னர், 2kg 625g சீனி எஞ்சியிருந்தது. எஞ்சியுள்ள சீனியை 125g நிறையுடைய எத்தனை சிறிய பக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

(1) 18 (2) 20 (3) 21

(40) ரொனியிடம் இரண்டு ரூபாய் நாணயக்குற்றிகளாகவும், ஐந்து ரூபாய் நாணயக் குற்றிகளாகவும் ரூபாய் 34 உள்ளது. இதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயக்குற்றிகள் எத்தனை?

(1) 5 (2) 7 (3) 8

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

[மூழு ம மேலும் ஆவணம்
முழுப் பதிப்புரிமையுடையது)
All Rights Reserved]

ந. சந்திரகுமார் M.A, M.A in Ed, M.Ed, M.phil, PhD(R)

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

6 - B

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ★ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ★ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ★ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை, இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ★ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.**
- ★ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத் திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என	V/I/T
உறுதிப்படுத்துகின்றேன். இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பிட்ட புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும், இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அது ஈடு இணையிலாச் செல்வம். அதனால்தான் வள்ளுவர் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருள். கல்வி அழிவில்லாது மட்டுமல்ல ; என்றும் நிலைத்து நிற்கக் கூடியது.

பிற செல்வங்கள் அழிந்து விடக் கூடியன. ஒருவரிடமுள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது ; நெருப்பினால் வேகாது ; கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது. கல்வி கொடுக்கக் கொடுக்கக் கூடும்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(i) இப்பந்தியில் எதன் முக்கியத்துவம் பற்றி கூறப்படுகின்றது?

_____

(ii) "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பதன் பொருள் யாது?

_____

(iii) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைமொழி எது? _____

(iv) "சொத்து" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லினை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக? _____

(v) "அவை" என்பதன் ஒருமைச் சொல்லை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

_____

(vi) ஒருவரிடமுள்ள என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக. _____

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ்** கோடிடுக.

(i) நாங்கள் _____ (பேருந்து / பேருந்து) வண்டியிற் சென்றோம்.

(ii) _____ (உலவன் / உழவன்) நெல் விதைத்தான்.

03. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் / பயனிலைத் தொடர்புகள் **சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓) எனவும், பிழையாக எழுதப்பட்டிருப்பின் (✗) எனவும்,** வாக்கியத்திற்கு எதிரேயுள்ள அடைப்புக்குள் இடுக.

(i) மழை பெய்ததால் குளங்கள் நிரம்பியது. (____)

(ii) பூங்காவில் நாங்கள் ஓடி ஆடித் திரிந்தோம். (____)

(iii) அனுலா, தனது நண்பர்களுடன் வீட்டுக்குச் சென்றார்கள். (____)

(iv) உங்கள் ஆர்வத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். (____)

04. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் **கடிதத எழுத்தில் உள்ள** சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) தந்தையின் சொற்கேட்டு நடப்பதாக கூறிய பின் **எடுத்தெறிதல்** கூடாது.
(அலட்சியம் செய்தல். / ஆமோதித்தல்.)

(ii) எங்கள் வீட்டுக்கு மாமா **அத்தி பூத்தாற் போல** வந்திருக்கின்றார். (அபூர்வமாக / எதிர்பாராமல்)

www.ikeon.lk

சுட்டெண் : .....

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை, அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) பாடல்களை இயற்றுபவனை _____ என்று அழைக்கின்றோம். (கவிஞர் / வித்தகன்)

(ii) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

என்னும் கவிதையில் (நற்குணம் உடையவர் / இரக்கமில்லாத மனம் உடையவர்) செய்த உதவியை உடனே மறந்து விடுவார்கள்.

06. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள **வெற்றிடத்தைப் புரணப்படுத்துக.**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
_____
தன்தேச மல்லாமற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

07. பின்வரும் வாக்கியத்தை **ஒருமை வாக்கியமாக** எழுதுக.

- இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

_____

08. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் **பொருத்தமான இடங்களில் நிறுத்தறகுறிகளை** இடுக.

- நல்லது போய் வாருங்கள்

09. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

கரம்பு நிலத்தை உழவனும்
கண்டு நன்றாய் உழைத்தனன் ;
கரும்பும், நெல்லும் விளைந்திடும்
கழனியாக மாற்றினன்.

"வயலாக மாற்றியமைத்தான்" என்பதை நன்கு வெளிப்படுத்தும் வரியை இக்கவிதை யிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக. _____

10. பின்வரும் பழமொழியைப் **பூர்த்தி செய்க.**

- குப்பையில் போட்டாலும் _____

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கிலத்தில்** எழுதுக.

(i) சந்திரன் - _____ (ii) பூக்கள் - _____

12. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தை **ஆங்கில எழுத்துக்களில்** எழுதுக.

- நான் வெளியே போகின்றேன். - _____

13. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைப் பெட்டியில் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து, **வெற்றிடத்தை நிரப்புக.**

(i) What do you like breakfast? _____

(ii) What do you like lunch? _____

Rice & Curry	Milk
Tea	Milk rice

14. பின்வரும் **சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில்** எழுதுக.

- க்ரீடா பூமிய - _____

15. பின்வரும் வாக்கியம் **சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில்** எழுதுக.

- பாடம் சொல்லித் தாருங்கள். - _____

16. நீங்கள் களப்பயணம் மேற்கொண்டு அருகிலுள்ள பூங்காவொன்றுக்குச் சென்று, அதனை இரசித்து களிப்பு அடைந்த சந்தர்ப்பத்தை நினைவுபடுத்தி "நான் பூங்காவுக்கு சென்ற போது" எனும் தலைப்பில் **மூன்று** வாக்கியங்களை எழுதுக. **(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.**

1. _____

_____

2. _____

_____

3. _____

_____


☞ **தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் விடைகளை எழுதுக.**

17. "இருபத்தையாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது" என்னும் எண்ணில் நூறாமிடத்திலுள்ள இலக்கத்தால் வகை குறிக்கும் பெறுமானத்தை எழுதுக. _____

18. இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 3 ஆலும், 4 ஆலும் மீதியின்றி வகுபடக்கூடிய எண்கள் எவை? _____

476	185
528	756

19. ஆறு தீக்குச்சிகளை மட்டும் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய 20க்கு குறைந்த மிகப் பெரிய உரோம எண்ணை எழுதுக. _____

20. 

உருவிலுள்ள சிறிய சதுரமொன்றின் நீளம் 1cm உம், அகலம் 1cm உம் ஆகும்.

(i) உருவில் நிழற்றப்பட்ட பரப்பளவு, மொத்த உருவின் எத்தனை மடங்கு? _____

(ii) உருவில் நிழற்றப்படாத பரப்பின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றருக்குச் சமன்? _____

21. ஒரு பாத்திரத்தின் கொள்ளளவு 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் ஆகும். அப்பாத்திரத்தினுள் ஒரு லீற்றர் 375 மில்லிலீற்றர் நீர் உள்ளது.

(i) இப்பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் நீரின் அளவை லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு? லீற்றர் _____ மில்லிலீற்றர் _____

www.ikeou.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

(ii) பாத்திரத்தில் தற்போதுள்ள நீரை 125 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்? _____

22. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

	திண்மவுரு	நேரான விளிம்பு	உச்சிகள்	முகங்கள்
(i)	நான்முகி			
(ii)	கூம்பகம்			

23. (i) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக. _____



(ii) $\frac{2}{3}$, $\frac{1}{4}$, 0.4, $\frac{8}{10}$ இவ்வெண்களில் மிகவும் **சிறிய எண்** யாது? _____


24. கொழும்பிலிருந்து மு.ப. 6.45 மணிக்கு புறப்பட்ட பேருந்து, பி.ப. 2.15 மணிக்கு மட்டக்களப்பை வந்தடைந்தது.

(i) கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு செல்வதற்கு பேருந்துக்கு எடுத்த நேரம் மணித்தியாலத்திலும், நிமிடங்களிலும் எவ்வளவு?

மணித்தியாலங்கள் _____ நிமிடங்கள் _____

(ii) மட்டக்களப்பை வந்தடைந்த நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தை இலக்கங்களில் எழுதுக. _____

25.



அருகிலுள்ள உருவில் A, B, D, C ஊடாக A யை சுற்றிவரவுள்ள தூரத்தை மீற்றரிலும், சென்றிமீற்றரிலும் தருக.


மீற்றர் _____ சென்றிமீற்றர் _____

26. குறித்த கடையில் 1kg 250g பருப்பை வாங்குவதற்கு அனுலா ரூபா 570 பணத்தைச் செலுத்தினாள். அப்பணத்தைச் செலுத்துவதற்கு ரூபாய் 1000 காசுத்தாளைக் கொடுத்த அனுலாவுக்கு மீதிப் பணமாக ரூபாய் 100, 50, 20 காசுத்தாள்கள் 12 கிடைத்தன.

(i) மீதியாகக் கிடைத்த ரூபாய் 20 காசுத்தாள்கள் எத்தனை? _____

(ii) மீதியாகக் கிடைத்த ரூபா 50 காசுத்தாள்கள் எத்தனை? _____

27.



இந்த எண்சட்டத்தில்.....

(i) வகை குறிக்கப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக? _____

(ii) கோல் B இல் உள்ள உருளையால் வகை குறிக்கப்படும் பெறுமானம் யாது?

_____

28. ரொனி A என்ற இடத்திலிருந்து கிழக்கு நோக்கி 500m தூரம் சென்று, இடதுபுறம் திரும்பி 200m தூரம் சென்று B என்ற இடத்தை அடைந்தான்.

(i) ரொனி A இடத்திலிருந்து தற்போது எத்திசையில் உள்ளான்? _____

(ii) அவன் மீண்டும் A என்ற இடத்தை அடைவதற்கு இன்னும் எத்தனை தடவை வலது புறமாகத் திரும்ப வேண்டும்? _____


29. ஒரு குவியலிலுள்ள 210 மாம்பழங்களில் $\frac{2}{7}$ மாம்பழங்கள் பழுதடைந்து விட்டன. மீதியாகவுள்ள மாம்பழங்களை ஐந்து நண்பர்களிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

(i) குவியலில் இருந்த மாம்பழங்களில் பழுதடைந்த மாம்பழங்கள் எத்தனை?

_____

(ii) ஒரு நண்பனுக்குக் கிடைத்த மாம்பழங்கள் எத்தனை? _____

30.



(i) உருவில் உள்ளே காணப்படும் செங்கோண முக்கோணிகள் எத்தனை? _____

(ii) உருவினுள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன? _____

☞ 31 தொடக்கம் 60 வரையுள்ள வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து, **அதன்கீழ் கோடிடுக.**

31. வீடுகளில் கை மருந்தாகவும், உணவாகவும் பயன்படுத்தும் மூலிகைத் தாவரம்.
(1) முருங்கை இலை (2) வல்லாரை (3) முடக்கொத்தான் (4) பசளி

32. கிராமப் புறங்களில் வீடுகளில் கிருமிகொல்லியாகவும், வீட்டுத் தோட்டத்தில் பூச்சி பீடைகளை விரட்டவும் பயன்படுவது.
(1) வேப்பிலை (2) கற்றாளை (3) மரமஞ்சள் (4) வெள்ளைப்பூடு

33. பண்டைய காலத்தில் மேம்படுத்தப்பட்ட வீதித்தொகுதியைக் கொண்ட "கற்பாலம்" எந்தப் புராதன நகரில் காணப்பட்டது?
(1) அநுராதபுரம் (2) பொலநறுவை (3) கண்டி (4) சிகிரியா

34. பண்டைய காலத்தில் எதனை கிணற்று நீரினுள் இட்டு பழுதடையாது பாதுகாத்தனர்?
(1) தக்காளிப்பழம் (2) வெண்டிக்காய் (3) கத்தரிக்காய் (4) பூசனிக்காய்

35. கல்சியத்தை அதிகளவு கொண்ட உணவு வகை.
(1) இறைச்சி (2) மீன் (3) பால் (4) முட்டை

36.



அருகிலுள்ள வானிலைக் குறியீடு எதனைக் குறிக்கும்?
(1) அதிக மழை (3) காற்றுடன் மழை
(2) இடி மின்னல் (4) இடி மின்னலுடன் மழை

www.ikeduk.lk


37. பின்வரும் உடுக்கோலங்களில் மிகக் குறைந்த உடுக்கள் அடங்கும் உடுக்கோலம் எது?
(1) பெருங்கரடி (2) தனுசு (3) விருட்சகம் (4) தென்சிலுவை

38. இரவு வேளையில் மிகவும் கூர்மையான பார்வைத் திறனுடைய பிராணி.
(1) வெளவால் (2) ஆட்காட்டி (3) ஆந்தை (4) நாய்

39. வானிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தம் தொடர்பான செய்திகளை உடனுக்குடன் அறிய உதவும் ஊடகம்.
(1) செய்தித்தாள் (2) தொலைபேசி (3) தொலைநகல் (4) வானொலி

40. அந்நியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை மக்களிடையே நாட்டுப் பற்றை வளர்க்க 40 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர் யார்?
(1) சேர்.டீ.பி. ஜயதிலக (3) கலாயோகி ஆனந்த குமாரசுவாமி
(2) வண. எஸ். மகிந்த (4) ஆதர்.சி. கிளார்க்

41. ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப் போல்..... எனும் நாட்டார் பாடல்.
(1) அரிவி வெட்டும் பாடல் (3) வண்டிப் பாடல்
(2) சூடுமிதிப் பாடல் (4) கோலாட்டம்

42. 
படத்திலுள்ளவாறு இரு முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்து, இரண்டிற்கும் இடையே மெழுகுவர்த்தியை வைத்தால், எத்தனை விம்பங்கள் தோன்றும்?
(1) 3 (2) 4 (3) 5

43. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் கலைத்துவப் படைப்புக்களில் ஒன்று.
(1) பராக்கிரமபாகு கதை - இலக்கிய நூல்
(2) திரிபீடகம் - பௌத்த புனித நூல்
(3) மகா வம்சம் - வரலாற்று நூல்
(4) விகாரைகள் - பௌத்த சமய ஸ்தலம்

44. இலங்கையில் பருவ மழை ஆரம்பிக்கும் காலங்களில் பெருகக்கூடிய கொள்ளை நோய்.
(1) கழிச்சல் நோய் (3) டெங்குக் காய்ச்சல்
(2) வாந்திபேதி (4) எலிக்காய்ச்சல்

45. வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கத்தரி, தக்காளி, வெண்டிப் பயிர்களை அதிகளவு சேதமாக்கும் பூச்சி பீடை.
(1) கும்பிடுபூச்சி (2) வெட்டுக்கிளி (3) மூட்டுப்பூச்சி (4) கறையான்

46. வீட்டுத் தோட்டத்தில் நடும் போது எந்த தாவரத்தண்டில் விரைவாக வேர்கள் தோன்றும்?
(1) மரவள்ளி (2) திராட்சை (3) கரும்பு (4) வற்றாளை

47. இலங்கைக்கே உரித்தான தாவரமும், விலங்கும் முறையே,
(1) நாகமரம், செண்பகம் (3) நிலவேம்பு, நீலப்புள்
(3) வேங்கைமரம், காட்டுக்கோழி (4) காட்டிலுப்பை, பூங்குயில்

48. ஒரேயொரு விதையைக் கொண்ட பழம் எது?
(1) மங்குஸ்தான் (2) வெரலு (3) லாவுள் (4) நெல்லி

49. வீடுகளில் நுளம்புகள் பெருகக்கூடிய இடமாகக் காணப்படுவது.
(1) உப்பு சேர்க்கப்பட்ட பூச்சாடிகள்.
(2) சவர்க்காரமிடப்பட்ட கழிவு நீர்த்தொட்டிகள்.
(3) தினமும் பயன்படுத்தாத மலசலகூடம்.
(4) நுளம்பு வலையால் மூடப்பட்ட கிணறுகள்.

50. வெள்ளப் பெருக்கு, புயல்காற்று, நிலநடுக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட முன்பு அதிக கவனம் செலுத்த வேண்டிய விடயம் எது?
(1) முக்கிய ஆவணங்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லல்.
(2) வீட்டினுள்ளே பாதுகாப்பாக இருத்தல்.
(3) போதியளவு உணவு வகைகளைச் சேகரித்து வைத்தல்.
(4) போதியளவு பணத்தை சேகரித்து வைத்தல்.

51. இலங்கையில் அதிகளவில் குளங்கள் காணப்படும் மாவட்டம்.
(1) வவுனியா (2) மன்னார் (3) அநுராதபுரம் (4) பொலநறுவை

52. கைத்தொழில் உபகரணம் தொடர்பில் **தவறானது** எது?
(1) மட்பாண்டம் - வனைதல் சக்கரம் (3) எண்ணெய் பிரித்தெடுத்தல் - செக்கு
(2) தளபாடம் - கைவாள் (4) சுண்ணாம்பு - பட்டடை

53. இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை எந்த அன்னியரின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது?
(1) ஒல்லாந்தர் (2) போர்த்துக்கீசன் (3) மலாயர் (4) பிரித்தானியர்

54. இலங்கை மக்களுக்கு தொற்றா நோய்களில் ஒன்றான பற்றுநோய் ஏற்படக் காரணங்களில் ஒன்று.
(1) நிறப்பொருள், செயற்கை சுவையூட்டி கொண்ட உணவை அதிகளவு உட்கொள்ளல்.
(2) அதிகளவு கொழுப்பு நிறைந்த உணவை அதிகளவு உட்கொள்ளல்.
(3) பதப்படுத்திய, இயற்கை உணவு வகைகளை அதிகளவு உண்ணுதல்.
(4) பழுதடைந்த உணவு வகைகளை அதிகளவில் உண்ணுதல்.

55. எரியும் நெருப்பினுள் உப்புக் கரைசலை இடும் போது அவதானிக்கும் மாற்றம் எது?
(1) உப்புக்கட்டி உருகும். (3) சத்தத்துடன் வெடிக்கும்.
(2) உப்புக்கட்டி எரியும். (4) தீ அணைந்து போகும்.

56. பச்சை வர்ணத்தைப் பெற கலக்க வேண்டிய வர்ணங்கள்.
(1) சிவப்புச் சாயம், நீலச் சாயம் (3) சிவப்புச் சாயம், கபிலச் சாயம்
(2) சிவப்புச் சாயம், மஞ்சள் சாயம் (4) நீலச் சாயம், மஞ்சள் சாயம்





57. இலங்கையின் தேசிய இலச்சினையில் தன்னிறைவைக் குறிக்கும் குறியீடு.
(1) நெற்கதிர்கள் (2) நிறை கலசம் (3) சந்திர சூரியன் (4) தர்ம சக்கரம்

58. ஊதா நிறக் கரைசலைத் தயாரிக்க நீருடன் எதனைக் கலக்க வேண்டும்?
(1) பீற்றூட் கிழங்கு (2) கரட்கிழங்கு (3) கொண்டிசு (4) பல்மாணிக்கம்


59. இலங்கையின் கலாசார முக்கோண வலயத்தினுள் அடங்காத புராதன நகரம்.
(1) குருநாகல் (2) கண்டி (3) பொலநறுவை (4) அநுராதபுரம்

60. வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிரைத் தாக்கும் சிறுபூச்சிகளைப் பிடித்துண்ணும் பிராணி.
(1) மூட்டுப்பூச்சி (2) வெட்டுக்கிளி (3) பனிப்பூச்சி (4) தும்பி

இல : 6 - A — வினாத்தாள் - I இன் விடை

வினா இல	விடை இல	விடை
1	1	
2	3	
3	3	
4	3	
5	3	வீற்றர்
6	1	சூரியன்
7	2	BAC
8	3	EE
9	1	C, A, B
10	2	ரோனி, குரு
11	3	$6 - 2 = 4^2$ $4 \times 4 = 16$ = ④
12	2	BADC
13	2	36 | 9 6
14	3	1ø, 2ø, 3ø, 4ø, 5ø, 6ø, 7ø, 8ø, 9ø, 1øø, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 11ø விடை - 21
15	2	$\frac{12}{20} - \frac{5}{20} = \frac{7}{20}$
16	3	சில கல்வி கற்காதவர்கள் புத்திசாலிகள் ஆவார்.
17	2	ரியூப்
18	3	1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28
19	1	 5 5 5 5 5 5 5 5 5 5 12 × 5cm = 60cm
20	3	வெ → 21 ச: 1, 8, 15, 22, 29 ஞா: 2, 9, 16, 23, 30 ∴ வெள்ளி
21	3	7 × 15/= = 105/= = 165/= - 105/= = 60/- 7 வாழைப்பழம் + 3 மாம்பழம்
22	2	2
23	2	• வவுனியா = $\frac{140}{3.30\text{மணி}}$ = 40km/h • கண்டி = 340 - 140 km = $\frac{200\text{km}}{40}$ = 5 மணி ∴ 12.00 மணி + 5.00 மணி = பி.ப. 5.00
24	3	$\frac{1}{8}$ பங்கு = 18 ∴ 8 மடங்கு = 18 × 8 = 144

www.ikeduik

வினா இல	விடை இல	விடை
25	2	முதலாம் இலக்கம் 4ம் இலக்கத்தின் 6 மடங்கு ⑥ 9 ③ 1 - 6931 6 மடங்கு 1 மடங்கு 2ம் இலக்கம், 3ம் இலக்கத்தின் 3 மடங்கு ⑥ ⑨ ③ ① - 6931 3 மடங்கு 1 மடங்கு
26	2	A - மனிதர்கள் B - ஆண்கள் Ⓒ - ரொனி D - பெண்கள்
27	2	Ⓓ - பெண்கள்
28	2	1 2 2 3 4 = 4 5 3 =
29	3	வி.மைதானம் ← நூலகம் ← பூங்கா மேற்கு கிழக்கு
30	3	= =
31	1	8
32	3	
33	2	16 × ④ = 64 16 - ④ = 12 ∴ 16 + ④ = 20
34	2	8
35	1	 மணிமுள் = 6 மணி நிமிட முள் = 4 × 5 = 20 ∴ 6.20 மணி
36	2	512 ÷ 8 = 8 × 8 64 = 64
37	2	7
38	1	⑦ × ③ = 21
39	3	2kg 625g = 2625 ÷ 125 = 21
40	2	7 × 2/- = 14/- 4 × 5/- = 20/- 34/-

- ஒவ்வொரு விடைக்கும் $2\frac{1}{2}$ புள்ளிகள் வீதம் 40 வினாக்களுக்கும் 100 புள்ளிகள் வழங்குக.
- விடைகள் ஒற்றை எண் இலக்கத்தில் வருமாயின்.....
  - * 10 விடைகள் சரி எனில் - $10 \times 2\frac{1}{2}$ = 25 புள்ளிகள்
  - * 1 விடைகள் சரி எனில் - 25 + 3புள்ளி = 25 புள்ளிகள்

வினாத்தாள் - II

இல : 06 - B **விடைகள்**

(01) (i) கல்வி (1 புள்ளி) (ii) கெடுதல் / அழிதல் இல்லாத செல்வம் கல்வி (1 புள்ளி)
(iii) ஈடுஇணை (1 புள்ளி) (iv) செல்வம் (1 புள்ளி) (v) அது (1 புள்ளி)
(vi) ஒருவரிடம் + உள்ள (1 புள்ளி)

(02) (i) பேருந்து (1 புள்ளி) (ii) உழவன் (1 புள்ளி)

(03) (i) ✗ (1 புள்ளி) (ii) ✔ (1 புள்ளி) (iii) ✗ (1 புள்ளி) (iv) ✔ (1 புள்ளி)

(04) (i) அலட்சியம் செய்தல் (1 புள்ளி) (ii) அபூர்வமாக (1 புள்ளி)

(05) (i) கவிஞர் (1 புள்ளி) (ii) இரக்கமில்லாத மனம் உடையவர். (1 புள்ளி)

(06) மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத் (1 புள்ளி)

(07) இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(08) நல்லது, போய் வாருங்கள். .(1 புள்ளி)

(09) கழனியாக மாற்றினன். (1 புள்ளி)

(10) குன்றுமணி மங்கிப் போகாது. (1 புள்ளி)

(11) (i) Moon (1 புள்ளி) (ii) Flowers (1 புள்ளி)

(12) I am going out (2 புள்ளி)

(13) (i) Milk rice (1 புள்ளி) (ii) Rice & curry (1 புள்ளி)

(14) விளையாட்டு மைதானம் (2 புள்ளி) **(15)** பாடம் கியலா தென்ன (2 புள்ளி)

(16)
- முதல் மூன்று வாக்கியங்களுக்கு 2 புள்ளி வீதம் 6 புள்ளிகள் வழங்கப்படும்.
- எழுவாய், பயனிலைத் தொடர்பு, எழுத்துக்கூட்டல் பிழையாக இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது.
- ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் ஒரு புள்ளி வழங்கப்படும்.

(17) 25099 → 0 (பூச்சியம்) (2 புள்ளி)

(18) 528, 756 (2 புள்ளி)

(19) XVII (2 புள்ளி)

(20) (i) மடங்கு $= \frac{\text{மொத்தக் கட்டம்}}{\text{நிழற்றப்பட்டது}}$

$= \frac{20}{4} = 5$ (1 புள்ளி)

(20) (ii) 20 - 4 = 16
= 16 சதுர சென்ரிமீற்றர் (1 புள்ளி)

(21) (i)

	லீ	மி.லீ
	4	5 0 0
−	1	3 7 5
	3	1 2 5

3 லீற்றர் 125 மில்லிலீற்றர் (1 புள்ளி)

(ii) 3125 ÷ 125 = 25 (1 புள்ளி)

(22)

	நேரான விளிம்பு	உச்சி	முகம்
நான்முகி	6	4	4
கூம்பகம்	8	5	5

(2 புள்ளி)

(23) (i) 0.3 (1 புள்ளி) (ii) $\frac{2}{3} = 0.66$, $\frac{1}{4} = 0.25$, 0.4, $\frac{8}{10} = 0.8$ $= \frac{1}{4}$ (1 புள்ளி)

www.tkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(24) (i)

மணி	நிமி
13	75
− ~~14~~	~~15~~
6	45
7	30

7மணி 30 நிமிடங்கள் (1 புள்ளி)

(ii) 14 : 15 மணித்தியாலம் - எழுத்தில் (1 புள்ளி)

14 : 15 h குறியீட்டு வடிவம்

(25) (i)

மீற்றர்	செ.மீற்றர்
1	
+ 3	55
5	65
9	20

× 2 = 18m 40cm

120 (2 புள்ளி)

(26) ∴ 1000/- - 570/- = 430/=

430/= → 100 + 100 + 50/- (9 × 20)

= 200 + 50 + 180

= 2 + 1 + 9

= 12 காசுத்தாள்கள்

(i) 20/= → 9 நாள் (1புள்ளி) (ii) 50/= → 1 நாள் (1புள்ளி)

(27) 6325


(i) ஆறாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து (1புள்ளி)

(ii) 3 × 100 = 300 (1புள்ளி)


(29) (i) 210 ÷ 7 = 30 × 2 = 60 மாம்பழம்(1 புள்ளி)

(ii) 210 - 60 = 150 ÷ 5 = 30 (1 புள்ளி)

(28) (i) (1 புள்ளி)



(ii) (1 புள்ளி)



- 2 தடவைகள்

(30) (i) 6 (1 புள்ளி) (ii) 6 (1 புள்ளி)

(31) (3) - முடக்கொத்தான் (1 புள்ளி)

(32) (1) - வேப்பிலை (1 புள்ளி)

(33) (1) - அநுராதபுரம் (1 புள்ளி)

(34) (3) - கத்தரிக்காய் (1 புள்ளி)

(35) (3) - பால் (1 புள்ளி)

(36) (4) - இடி மின்னலுடன் மழை (1 புள்ளி)

(37) (4) - தென்சிலுவை (1 புள்ளி)

(38) (3) - ஆந்தை (1 புள்ளி)

(39) (4) - வானொலி (1 புள்ளி)

(40) (2) - வண.எஸ். மகிந்த (1 புள்ளி)

(41) (1) - அரிவி வெட்டும் பாடல் (1 புள்ளி)

(42) (1) - 3 (1 புள்ளி)

(43) (3) - பராக்கிரமபாகு கதை - இலக்கிய நூல் (1 புள்ளி)

(44) (3) - டெங்குக் காய்ச்சல் (1 புள்ளி)

(45) (3) - மூட்டுப்பூச்சி (1 புள்ளி)

(46) (4) - வற்றாளை (1 புள்ளி)

(47) (3) - நிலவேம்பு, நீலப்புள் (1 புள்ளி)

(48) (4) - நெல்லி (1 புள்ளி)

(49) (3) - தினமும் பயன்னடுத்தாத மலசலகூடம் (1 புள்ளி)

(50) (1) - முக்கிய ஆவணங்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லல். (1 புள்ளி)

(51) (3) - அநுராதபுரம் (1 புள்ளி)

(52) (4) - சுண்ணாம்பு - பட்டடை (1 புள்ளி)

(53) (4) - பிரித்தானியர் (1 புள்ளி)

(54) (1) - நிறப்பொருள், செயற்கை சுவையூட்டி கொண்ட உணவை அதிகளவு உட்கொள்ளல். (1 புள்ளி)

(55) (3) - சத்தத்துடன் வெடிக்கும். (1 புள்ளி)

(56) (4) - நீலச்சாயம், மஞ்சள் சாயம் (1 புள்ளி)

(57) (1) - நெற்கதிர்கள் (1 புள்ளி)

(58) (3) - கொண்டிசு (1 புள்ளி)

(59) (1) - குருநாகல் (1 புள்ளி)

(60) (4) - தும்பி (1 புள்ளி)

www.kedb.lk